வயிற்றுக்காய்ச்சல் என்பது வளர்ந்துகொண்டே இருப்பதால் அதைப் போக்க என்ன நடவடிக்கைகள் அமைச்சரவர்கள் எடுப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்கு வாக்ஸின் வேண்டியதில்லை. வேறுவிதமான முறையைத்தான் அனுசரிக்க வேண்டும்.

Madras Shops and Establishments Act, 1947

* 167 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether any amendment to the Shops and Establishments Act to regulate the overtime work in private companies in this State is under consideration?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

* 168 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri S. Pakkirisami Pillai) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Special Officer appointed for the revision of the Madras Shops and Establishments Act, 1947, has submitted his report?

THE HON. SRI R. VENKATARAMAN : No special officer was appointed for the revision of the Madras Shops and Establishments Act, 1947. A Special Officer appointed in 1952 to survey and report about the working of the Madras Shops and Establishments Act, 1947, with special reference to the question of launching prosecutions for offences and granting exemptions, has submitted his report.

SRI V. K. KOTHANDARAMAN : 1953-வது ஆண்டிற்கு முன்னால் ஒரு தொழிலாளியாக இருந்தாலும் அதற்கு மேற்பட்டவர்களாக இருந்தாலும் ஷாப் சட்டத்தில் இருக்கக்கூடிய சலுகைகள் இருந்து வந்தது. 1953-க்கு பிறகு நான்கு தொழிலாளர்களுக்கும் அதற்கு மேற்பட்டவர்களுக்கும்தான் அந்த சட்டம் என்ற முறை வந்த பிறகு இப்பொழுது 6, 7 பேர்கள் வேலை செய்யக்கூடிய இடத்திலே 1, 2, 3 என்கிற அளவிற்கு கணக்கு எழுதிவருவதினால் தொழிலாளர்கள் அதனால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இதை சென்ற சட்டசபையில் கேட்டபோது, மத்திய சர்க்கார் இதை பரிசீலனை செய்து வருகிறது என்றும் விரைவிலே பழையபடி சட்டம் கொண்டுவரப்படும் என்றும் சொல்லப்பட்டது. ஆகவே இப்பொழுது உடனடியாக ஒரு தொழிலாளி இருந்தாலும் பல பேர்கள் இருந்தாலும் ஷாப் சட்டப்படி உள்ள சலுகைகள் பெறக்கூடிய அளவில் மீண்டும் சட்டம் கொண்டுவரப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் பல கேள்விகளை சேர்த்து போட்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் கொண்டு வருகிற சட்டம் வேண்டுமா வேண்டாமா என்று இரு சட்டத்தையும் பரிசீலனை செய்துபார்த்து அபிப்பிராயம் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். மத்திய சர்க்கார் சட்டத்திலுள்ள சலுகைகளை விட நம் மாகாண ஷாப் அண்டு எஸ்டாப்ளிஷ்மெண்ட் அக்டில் இருக்கிற சலுகைகள் அதிகமாக இருக்கிறது. அடுத்தபடியாக சட்டத்தை மீறி யாராவது 6, 7 பேர்கள் இருக்கிற இடத்தில் ஒன்று இரண்டு பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று பொய் கணக்கு வைத்துக்கொண்டு இருந்தால் அதைப்பற்றி புகார் செய்தால் உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும்.